REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 86630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: பங்குனி 30உ வியாழன் (12—4—56) ★ ★ வெளியூர்: சித்திரை 1உ வெள்ளி (13—4—56) [இதழ் 257

எத்தனை பெரிய திட்டம்? எவ்வளவு கருணை?

இரண்டாம் திட்டத்தின்கீழ் டெல்லி சர்க்கார், சென்னை மாநிலத்திற்கு ஒதுக்கியுள்ள பல்வேறு (!) திட்டங்களுள் மிக முக்கியமானது என்ன தெரியுமா?

டெல்லி, கல்கத்தா நகரங்களில் துவங்கப்படவிருப்பது போன்றதொரு பெரிய (!) பால் பண்ணையை சென்னை நகரிலும் துவங்கப்போகிறார்களாம்.

பெருமிதத்தோடு அறிவிக்கிறார் டெல்லி விவசாய மந்திரி பஞ்சாப்ராவ் தேஷ்முக்.

பண்ணை நிபுணர்கள் மாநாட்டில் பேசியபோதுதான் அவர் இந்தத் தகவலைத் தந்திருக்கிறார்.

'தனி ஒரு கும்பலின் கோயிலானாலும் ஆலய நுழைவு சட்டத்திற்கு உட்பட்டதே'

'தினசரி சந்தர்ப்பணையின்போது மற்றவரைத் தடுக்கும் உரிமை தர்மகர்த்தர்களுக்கு உண்டு'

'ரதோற்சவம் நடைபெறும் 5 நாட்களிலும் தடை விதிப்பதற்கு உரிமை இருக்கிறது'

கிழக்குக் காஷ்மீரிலிருந்து குடியேறிய முல்கிப்பேட்டை பார்ப்பனக் குடிகளின் வல்லடி வழக்கு

கவுட சரஸ்வதி பார்ப்பனர்கள் தென்னாடு புகுந்த கதை விளக்கம்

தேன் கன்னடத்தில் உள்ள முல்கி பேட்டையிலும், அதைச் சார்ந்துள்ள இரண்டு சிற்றூர்களிலும் கவுட சரஸ்வதி பார்ப்பனர் என்ற ஒரு சிறு பிரிவினர் இருந்துவருகின்றனர். அவர்களுடைய நிர்வாகத்தில் முல்கிபேட்டையிலிருக்கும் வெங்கடரமணசாமி கோயில் இருந்துவருகிறது.

அந்தக் கோயில், சென்னை ஆலய நுழைவு சட்டத்திற்குட்பட்டதா, இல்லையா என்ற பிரச்சினை கிளம்பியது.

அரசாங்கம் ஆலய நுழைவு சட்டத்தை அமுல் நடத்த முனைந்தது. அதை எதிர்த்து தேன் கன்னட மாவட்ட நீதிபதியிடம் கோயில் நிர்வாகிகளான கவுட சரஸ்வதி பார்ப்பனர்கள் வழக்குத் தொடுத்தனர்.

ஆலய நுழைவுச் சட்டம் அக்கோயிலையும் கட்டுப்படுத்தக் கூடியதே என, மாவட்ட நீதிபதி தீர்ப்பளித்தார்.

அத்தீர்ப்பை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில், கோயில் நிர்வாகிகள் வழக்கெடுத்தனர். வழக்கை விசாரித்த உயர் நீதிமன்ற நீதிபதிகள் பி. கோவிந்தமேனன் அவர்களும், பி. என். இராமசாமி அவர்களும் கீழ் நீதிமன்றத் தீர்ப்பை ஆமோதித்து எதிர் வழக்கைத் தள்ளிவிட்டனர்.

முல்கிபேட்டை கோயில், தம் மரபைச் சேர்ந்த கவுட சரஸ்வதி பார்ப்பனர்களுக்கு மட்டுமே சொந்தமானது என்றும், அதில் இந்துக்களாக உள்ள மற்றவர்கள் உரிமை கொண்டாடுவதற்கு இடமில்லை என்றும், சென்னை அரசாங்கத்தின் 1947-ம் ஆண்டைய ஆலய நுழைவு சட்டம், இந்திய அரசியல் சட்ட அடிப்படை உரிமை 26-வது விதிப்படி செல்லக்கூடியதாகாது என்றும், கவுட பார்ப்பனர் சார்பில் வாதிடப்பட்டது.

அதுவுமன்றி, முல்கிபேட்டையையும், அதைச் சார்ந்துள்ள இரண்டு ஊர்களில் மட்டுமே உள்ள கவுட பார்ப்பனர்களின் பரம்பரை சொத்து அக்கோயில் என்றும், அப்பார்ப்பனக்குடிகளை தென் கன்னடத்தில் உள்ள மற்றவர்கள் அன்னியர்களாகவே கருதி, உடனிருந்து உண்ணல், பெண் கொடுத்தல் வாங்கல் ஆகிய உறவு வைத்துக்கொள்வது கிடையாது என்றும், கவுட சரஸ்வதி பார்ப்பனர் சார்பில் கூறப்பட்டது.

அதை அரசாங்க சார்பில் மறுத்துரைக்கப்பட்டது. வழக்கை விசாரித்த உயர் நீதிமன்ற நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் கூறியதின் சாரமாவது:—

தென் கன்னட மாவட்ட அரசாங்க ஏட்டில் குறிக்கப்பட்டிருப்பதுபோல், கிழக்கு காஷ்மீரிலிருந்து கிளம்பி பீகாரில் வந்து கவுட சரஸ்வதி பார்ப்பனர் தங்கினர். அதன் பிறகு திரட் எனும் இடத்திற்குச் சென்றனர். அதன் பின்னர், அவர்களில் சிலர், தென் கொங்கணத்தில் உள்ள கோவாவில் குடியேறினர். இப்போது தென்கன்னடத்தில் இருக்கும் கவுட சரஸ்வதி பார்ப்பனர்களின் முன்னோர்கள் போர்ச்சுகீசியர் கொடுமைக்கஞ்சி, தென்கன்னடப் பகுதிக்குக் குடியேறி தங்கி இருக்கவேண்டும். இப்பொழுதும்கூட கவுட பார்ப்பனர்களில் சிலர், கோவாவில் உள்ள கோயில்களை, தங்களுடைய குலதேவதைகளின் குடியிருப்பவைகளாகக் கருதி வருகின்றனர்.

அரசியல் சட்ட 26-வது விதி, தனி ஒரு கும்பலுக்குச் சொந்தமான கோயில் சொத்துக்களை நிர்வகிக்கும்பொறுப்பை மட்டுந்தான் குறிப்பிட்ட ஒரு கும்பலுக்கு உரிமையாக்குகிறதே அல்லாது, இந்துக்களாகக் கருதப்படும் மற்றவர்கள் அரசியல் சட்ட 25 (1)-வது விதிப்படி பெற்றுள்ள அடிப்படை உரிமைக்குத் தடை விதிக்கும் அதிகாரத்தை ஒரு கும்பலிடம் ஒப்படைப்பதாக இல்லை.

மதத் துறைக்குத் தொடர்புடைய சொந்த மத காரியங்களை நிர்வாகம் செய்வது என்ற பெயரில், தீண்டப்படாதோர் எனப்படுவோர் குறிப்பிட்ட கோயிலுக்குள் நுழைவதில் தடை விதிப்பதற்கு 26 (2) விதி இடமளிக்கவில்லை. அதுவுமல்லாமல், பொது அறநிலையங்களை இந்து பொதுமக்களுக்குத் திறந்து விடுவதுபற்றி சட்டமியற்ற உரிமை தரும் 25 (2) விதியின் தன்மையையும், தகுதியையும், 26 (2)-வது விதி கட்டுப்படுத்துவதாகவும் இல்லை.

ஆலய நுழைவுச் சட்டம் 2-வது பிரிவில், 'கோயில்' என்பதற்குத் தரப்பட்டுள்ள விளக்கம், தனி ஒரு கும்ப

(4-ம் பக்கம் பார்க்க)

மாநில மாநாட்டுப் பணி தீவிரம்

தொண்டர்கள், திடலை சுத்தம் செய்தனர்

10-4-56 மாலை 3-மணிக்கு மாநில மாநாட்டு தொண்டர் படைத் தலைவர் ஐ. எம் ஷரீப் தலைமையின் கீழ் ஏராளமான தொண்டர்கள் திருச்சி நகரில் ஊர்வலமாகப் புறப்பட்டு, மாநாடு நடைபெற விருக்கின்ற 'ரேஸ் கோர்ஸ்' மைதானத்தை வந்தடைந்தனர்.

ஊர்வலத்தில், ஒவ்வொரு தொண்டரும் கழகக் கொடியும், மண்வெட்டியும் ஏந்திக் கொண்டு மாநாட்டுத் திடலை வந்தடைந்தனர்.

பிறகு மாநாடு நடைபெற வேண்டிய இடத்திலுள்ள செடி கொடிகளை செதுக்கிச் சுத்தம் செய்தனர்.

மாலை 6 மணிவரை சுத்தம் செய்தபின் கலைந்து சென்றனர்.

தம்மம்பட்டி தோழர்கள் வழக்கு

மீண்டும் ஒத்திவைப்பு

பிப். 20-வேலை நிறுத்தத்தை யொட்டி தம்மம்பட்டித் தோழர்கள் மீது தொடரப்பட்டுள்ள வழக்கு சில வாய்தாக்களுக்குப் பிறகு மீண்டும் 11—4—56-ல் விசாரணைக்கு ஒத்திபோடப்பட்டிருந்தது.

11—4—56-ந் தேதி விசாரணைக்காகத் தோழர்கள் சார்பில் வாதாட வழக்கறிஞர் செட்டோ வந்திருந்தார்.

வழக்கு விசாரணையைக் காண்பதற்காக கழகத் தோழர்களும், பொதுமக்களும் நீதிமன்றத்திற்கு வந்திருந்தனர்.

வழக்கு மீண்டும் 18-4-56-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

என். எஸ். இளங்கோ உள்ளிட்ட தோழர்களுக்குச் சிறைவாசம்

அபராதம் கட்ட மறுத்து சிறை சென்றனர்

பட்டுக்கோட்டை, ஏப். 11— பிப். 20-ந் தேதியன்று தேவிகுளம்—பீர்மேடு சம்மந்தமாக நடந்த அர்த்தாலில் கைது செய்யப்பட்ட கூட்டணித் தோழர்களுக்குப் பல தடவை தவணை போடப்பட்டு இறுதியாக, 11-4-56 அன்று தீர்ப்புக்கு பட்டுக்கோட்டை ஜூடிஷியல் மாஜிஸ்திரேட்டால் நாள் குறிப்பிடப்பட்டிருந்தது.

அன்று அனைவரும் கோர்ட்டில் ஆஜராகியிருந்தனர்.

அவர்களுக்கு ரூ. 2 அபராதமும், கட்டத் தவறினால் இரண்டு நாட்கள் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

அபராதம் கட்ட மறுத்து, அனைவரும் சிறை தண்டனை ஏற்றனர்.

அவர்கள் அனைவரும் பட்டுக்கோட்டை சிறையில் தண்டனை அனுபவித்து வருகின்றனர்.

சிறைவாசம் மேற்கொண்ட தோழர்கள்:—

என். எஸ். இளங்கோ, அமிர்தலிங்கம், ஆர். முனுசாமி, சபாபதி, கே. எம். இஸ்மாயில் (தி. மு. க.), பி ரெத்தினம், சங்கர், சாம்பசிவம் (சம்பூ), வி. முருகேசன் (பி.சோ.), காடிமுத்து (சோஷ).

தாண்டானூர் தோழர்கள் வழக்கு

விசாரணைக்குப் பின் மீண்டும் ஒத்திவைப்பு

பிப் 20—பொது வேலைநிறுத்தத்தை யொட்டி தாண்டானூர் தோழர்கள் மீது தொடரப்பட்டுள்ள வழக்கு சில வாய்தாக்களுக்குப்பின் மீண்டும் 11-4-56ல் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அரசாங்க வழக்கறிஞர், சம்மந்தப்பட்ட பஸ் டிரைவர், கண்டக்டர் இருவரையும் விசாரணை செய்தார்.

வழக்கில் சம்பந்தப்பட்ட தோழர்கள், எதிர் வழக்காடினர்.

வழக்கு விசாரணை மீண்டும் 20—4—56-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக மாஜிஸ்திரேட் அறிவித்தார். (ந-ர)

'போர்ட்டர்'வேலை செய்யும்

தாய்மார்கள்!

653 பேர்கள் இந்திய இரயில்வேக்களில் உள்ளனராம்

"வடக்கு, தென்மேற்கு இரயில்வேக்களில் உள்ள பல இரயில் நிலையங்களில் 653 பெண்கள் வரை 'போர்ட்டர்'களாக வேலை செய்கிறார்கள்"

என்று உதவி இரயில்வே மந்திரி மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

வான்கானேர் என்ற இரயில் நிலையத்தில் மட்டும் சுமார் 50 பெண்கள் 'போர்ட்டர்'களாயிருக்கின்றனராம்!

உணவும்—உரிமையும்

"இந்தியாவுக்கும்—ரஷ்யாவுக்கும் ஒரு வேறுபாடு உண்டு; ரஷ்ய மக்களுக்குப் போதிய உணவு கிடைக்கிறது—ஆனால், மனித உரிமை இல்லை; ஆனால், இந்தியாவில் உரிமை இருக்கிறது—போதிய உணவுதான் இல்லை"

என்று அமெரிக்கத் தொழிலாளர் சம்மேளன துணைத் தலைவர் வால்டர் ரூதர், பெங்களூரில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 12—4—'56 வியாழன்

இவருக்கு நாக்கு-- ஒன்ரு? இரண்டா?

"இந்த இராஜ்யத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 170·3 கோடி, இவ்விராஜ்ய அபிவிருத்தித் தேவைகளைப் பூர்த்திச் செய்வதற்கு, முழுதும் போதுமானதாக இல்லை;"

"இந்த ராஜ்யத்தில் கனரகத் தொழில்களை நிறுவுவதற்கும், அவைகளுக்குரிய தொகையைத் திட்டத்தில் ஒதுக்குவதற்கும், இவ்விரு ராஜ்யத்தின் தேவைகளிலும் பொருத்தங்களிலும் போதிய கருத்துச் செலுத்த வேண்டும்."

"இராஜ்ய அரசாங்கம் பெரிதும் முயன்றிருந்தும்கூட, தெற்கு புறக்கணிக்கப்பட்டு இருக்கிறது. மக்கள் தொகை பெருகி இருக்கிறது; அத்துடன் வேலையின்மையும் கூடி இருக்கிறது. கனரகத் தொழில்கள் இங்கு நிறுவப்பட்டால் அல்லாது, வேலையின்மையைக்கருவறுக்க இங்கு இயலாது. சிமெண்ட், அலுமினியம், காகிதம், செயற்கை உரம் முதலிய தொழில்களைத் துவங்க, இங்கு நிரம்ப வாய்ப்பு இருக்கிறது. சர்க்கரை பற்ருக்குறையாக இருந்து வருவதால், ஏராளமான சர்க்கரை ஆலைகளைத் தொடங்குவதற்கு இங்கு இடமிருக்கிறது."

—வி. கே. இராமசாமி

★

"இவ்வோரு (நெய்வேலி) ஏற்பாட்டினுல் மட்டுமே நாம் திருப்தி அடைந்துவிடவில்லை. இதற்கு மேலும், சில கனரகத் தொழில்களை நிர்மாணிக்க வேண்டும் என விரும்புகிருேம். அப்பொழுதுதான் நமது பொருளாதார முன்னேற்றம் உறுதியாகும். இது வெறும், சிறிதும் —நடுத்தரமுமானத் தொழில்களை நிறுவி விடுவதால் மட்டுமே வாய்த்து விடாது. இதைத்தான் மத்திய அரசாங்கத்திடம் சொல்லி வருகிருேம் சேலத்தில் கிடைக்கும் அலுமினியம், இரும்புக் கனிப் பொருட்களை தொழில்படுத்த வேண்டும் என வற்புறுத்தி வருகிருேம்.

"இரண்டாவது திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகையைக் கண்டு எனக்கு ஏற்பட்டுள்ள ஏமாற்றத்தை, நான் மறைக்கவிரும்பவில்லை. தேவிகுளம், பீர்மேடு விவகாரமாய் மத்திய அரசாங்கம் அளித்தத் தீர்ப்பை, அது எத்தகைய அநீதியானதாக இருந்த போதிலும் கூட, ஒப்புக்கொள்ள வேண்டும் என, நான் கோரியது போன்று, இந்த விவகாரத்தில், தரப்பட்டுள்ள முடிவை, வாய்ப்பொத்தி ஏற்றுக கொள்ளும்படி கோரமாட்டேன். இப்பொழுது தரப்பட்டுள்ளதைக் கொண்டு திருப்தி அடைந்து அமைதியாக இருந்துவிட முடியாது. நமது இராஜ்யத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளதை மேலும் கூட்ட வேண்டும் என நாம்தொடர்ந்து வலியுறுத்தி வரவேண்டும். ஒதுக்கப்பட்டத் தொகை இறுதியாகக் கூட்டப்படுவதைக் காண்பது என்ற முடிவை, அரசாங்கம் என்ற முறையில் நாங்கள் கோண்டிருக்கிருேம்."

—நிதி அமைச்சர் சுப்ரமண்யம்

★

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், இந்த இராஜ்யத்தில், எந்த ஒரு பெருந் தொழிலை நிறுவவும் ஏற்பாடு செய்யப்படவில்லை என்பது உண்மையாகும். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், சில பெருந் தொழில்களை இங்கு நிறுவும்படி, மத்திய அரசாங்கத்தை வற்புறுத்த முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்டு வருகிறது சென்னை இராஜ்யத்தைப் பொறுத்தவரையில், தொழில் துறையில் அபிவிருத்தி செய்வதற்கான தேவை இருந்து வருகிறது."

—முதலமைச்சர் காமராசர்

★

மேலே குறித்துக் காட்டியுள்ள கருத்துரைகளை, நன்கு சிந்திக்க வேண்டுகிருேம்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தெற்குப் பகுதி அலட்சியப்படுத்தப்பட்டுவிட்டது அல்லது புறக்கணிக்கப்பட்டுவிட்டது என்பது காங்கிரஸ் கட்சியினர் உட்பட, அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாகும்.

முதலாண்டுத் திட்டத்தில் ஒவ்வொரு மாகாணத்திற்கும் நிர்ணயிக்கப்பட்டிருந்த வேலைத் திட்டங்களும், அவைகளுக்கு ஒதுக்கப்பட்டிருந்தத் தொகைகளும், தெற்கை வடக்கு வஞ்சித்திருக்கிறது என்பதற்குத் தக்கதோர் சான்ருகும்.

வடக்கின்மீது பழி கூறுவதையே ஒரு போக்காகக் கொண்டிருக்கிருேம் என்ற அபவாதத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கும் நாம் மட்டுமன்றி, நேருக்கு நேராகத் தொல்லைகளை அனுபவித்துவரும் தொழிலதிபர்கள், இந்தியப் பேரரசின் ஓரவஞ்சனைப் போக்கை ஐயத்திற்கிடமின்றி எடுத்துக் காட்டி, தீவிரமாகக் கண்டித்து இருக்கின்றனர். ஒன்றிரண்டு தேசீய ஏடுகள் படம் தீட்டியும், அக்கருத்தை உலகுக்கு அறிவித்துள்ளன.

தென் மண்டலத்திலுள்ள ஒவ்வொரு இராஜ்ய அமைச்சர்களும், முதலாண்டுத் திட்டத்தில் தென்னகம் வஞ்சிக்கப்பட்டுள்ள அக்கிரமத்தைப் பகிரங்கமாகவும், மறைமுகமாகவும் சுட்டிக்காட்டி, தமதம் நெஞ்சுரத்திற்கொப்பக் கண்டித்துக் கூறியுள்ளனர்.

முதலாண்டுத் திட்டத்தில் ஒவ்வொரு இராஜ்யத்திற்கிடையிலும் காட்டப்பட்டுள்ள வேற்றுமை, பாகுபாடு, குறைவு - நிறைவு களையப்பட வேண்டும் எனவும், இரண்டாவது திட்டத்தில் இராஜ்யங்களுக்கிடை திட்டங்களைப் பகிர்ந்தளிப்பதில் சம நிறைவு இருக்க வேண்டும் எனவும், திட்டக் குழுவை தென்னகக் காங்கிரஸ் அமைச்சர்கள் வலியுறுத்திவந்துள்ளனர்.

திட்டக் குழுவும், அமைச்சர்களின் சம நிறைவு கோரிக்கையைத் தத்துவரீதியாக ஒப்புக்கொண்டதுடன், செயலளவிலும் மேற்கொள்ளுவதாகக் கூறிடவும் முன்வந்தது.

இந்த சமநிறைவுக் கொள்கை பற்றிய முழு உண்மையை, சென்னை சட்டசபையில் நிதி அமைச்சரே விளக்கிக் கூறியுள்ளார். தத்துவரீதியில் ஒப்புக்கொண்ட திட்டக் குழு, செயலாற்ற முன்வராதது முறையல்ல எனவும் அதே நிதி அமைச்சர் போதனைபுரிந்தும் உள்ளார்.

இரண்டாவது திட்டத்தில் சென்னைக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை, தென்னட்டின் தொழில் வளர்ச்சித் தேவையைப் பூர்த்தி செய்வதாக இல்லை என்றும், அத்தொகையை மக்கள் தொகைக்கேற்ப உயர்த்தவேண்டும் என்றும், அதற்காக இந்திய அரசாங்கத்தைத் தொடர்ந்து வலியுறுத்த மற்றக் கட்சிகளின் ஒத்துழைப்பு வேண்டும் என்றும், தேவிகுளம், பீர்மேடு விவகாரத்தில் நடந்துகொண்டதுபோல் இத்துறையில் தாம் நடந்துகொள்ளப் போவதில்லை என்றும், நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம் அவர்கள் கண்ணீர் வடித்திருக்கிருர் அல்லது அதுபோல் பிறர் எண்ணும் வகையில் நடித்து இருக்கிருர்.

இரண்டாவது திட்டத் தொகையைக் கூட்டக் கோரும் தீர்மானத்திற்குத் திருத்தம் கொண்டுவந்த காங்கிரஸ் உறுப்பினர் — காங்கிரஸ் கட்சியிலேயே மிகுந்த செல்வாக்குப் பெற்றிருப்பவர் எனக் கருதப்பட்டு வருபவர் — தெற்கை வடக்கு புறக்கணித்து வருவதை ஒளிவு மறைவு இன்றி ஒப்புக்கொண்டு பேசி இருக்கிருர். கனரகத் தொழில்களை சென்னை இராஜ்யத்தில் துவங்க வேண்டும் என வலியுறுத்திக் கூறி இருக்கிருர்.

நிதி அமைச்சரும், இரண்டாவது திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி அளவு கண்டு, தமக்கு ஏற்பட்டுள்ள ஏமாற்றத்தை, மறைத்துக்கொள்ள விரும்பாது, சபையில் வெளிப்படையாகக் காட்டிக்கொண்டுள்ளார்.

சென்னை சட்டசபையில் தீர்மானம் நிறைவேறிய இரண்டு நாட்கள் கழித்து, முதலமைச்சர் கனம் காமராசர் அவர்கள், தென்னிந்திய வியாபார சங்கத்தின் நாற்பத்தி ஆருவது ஆண்டு விழாவில் கலந்துகொண்டு பேசி இருக்கிருர். அக்கூட்டத்திலும்கூட, இரண்டாவது திட்டத்தில் எந்த ஒரு கனரகத் தொழிலும் தென்னுட்டிற்கு ஒதுக்கப்படவில்லை என்பது உண்மையேயாகும் என, முதலமைச்சர் குறிப்பிட்டிருக்கிருர். அதுவுமன்றி, பெருந் தொழில்களை இங்குத் துவங்குவதற்கான அவசியத்தை, இந்தியப் பேரரசிற்கு உணர்த்த, தம்மாலான முயற்சிகள் அனைத்தையும் சென்னை அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது எனவும் எடுத்துக் கூறியுள்ளார் முதலமைச்சர்.

வேலையின்மைப் பிரச்சினையைக் களைவதற்காக, முடியுமான இடங்களில் பெருந் தொழில்களைத் துவங்க வியாபார சமூகம் முன்வருமானல், அரசாங்கம் தேவைப்படும் உதவிகளைத் தர ஆயத்தமாக இருக்கிறது எனவும், முதலமைச்சர், வியாபாரிகளுக்கு ஆசை மொழியை நேசமாகக் கூறியுள்ளார்.

அதே முதலமைச்சர், மூன்றே தினங்களுக்குப்பிறகு, சேலம் மாவட்டம் சென்று ஓசூர் மக்களைப் பார்த்து, 'அலுமினியத் தொழிற்சாலை ஏற்பாட்டில் பொறுமை காட்டுங்கள்! கனரகத் தொழில்கள் நிறுவுவது பற்றி மூச்சுவிடாதீர்கள்! வடக்கு - தெற்கு என்று வாய்திறவாதீர்கள்! தெற்கை வடக்கு வஞ்சிக்கிறது என்றப் பேச்சுக்கே நியாயம் கிடையாது! அதுகண்டு அஞ்சாதீர்! பெரம்பூர் புகை வண்டிப் பெட்டி உற்பத்திச்சாலை ஒன்று மட்டுமே போதாதா? காங்கிரஸ் அரசாங்கம் எல்லாம் செய்யும்! என்று முன்னுக்குப்பின் முரணுக ஊளையிட்டு இருக்கிருர்!

சென்னை, தென்னிந்திய வர்த்தகர் சங்கத்தில், மூன்றே தினங்களுக்குமுன், இரண்டாவது திட்டத்தில் ஒரு கனரகத் தொழிலுக்கும் ஏற்பாடு இல்லை என்பது உண்மையே என ஒப்புக்கொண்ட முதலமைச்சர், அவ்வாறு கூறிய பொழுது பெரம்பூர் தொழிற்சாலை நிறுவப்படவில்லை என்ற நம்பிக்கையிலா பேசினுர்? அல்லது அத்தொழிற்சாலை நிறுவப்பட்டிருப்பதைத் தாம் அறிந்திராத நிலையிலா பேசினுர்?

மூன்று நாளைக்கு முன் பெருந் தொழில்களே இடம் பெறவில்லை எனக் கூறிய ஒரு முதலமைச்சர், மூன்றே நாளைக்குப் பிறகு பெரம்பூர் தொழிற்சாலையைக் குறிப்பிட்டுக் காட்டி, 'இதோ கனரகத் தொழில் பாருங்கள்' என முரண்படக் கூறுவதை, பேச்சென்பதா? பிதற்றல் என்பதா? வெறும் ஊளை என்பதா?

தம்மை முதலமைச்சராகக் கொண்டு செயல்பட்டு வரும் ஒரு அரசாங்கம் செய்துள்ளத் தீர்மானத்தையும், அதற்குத் திருத்தமாகக் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளத் திருத்தத் தீர்மானத்தையும், திருத்தத் தீர்மானத்தின்மீது பேசிய பொறுப்பான காங்கிரஸ் உறுப்பினரின் காரமுள்ள பேச்சையும்கூட அறிந்து கொள்ளாத நிலையில், முதலமைச்சர் எனப் பெயரைச் சுமந்துகொண்டு, கனம் காமராசர் அவர்கள் இருந்து வருவதில், அவருக்கு வெட்கம் இருப்பதாகவும் காணுேம்! தனது அரசாங்கமேற்கொண்டுள்ள ஒரு முக்கிய பணியைக்கூட விளக்கமாகத் தெரிந்துகொண்டு, நேர்மையாகவும் நாணயமாகவும், முன்னுக்குப் பின் முரண்பாடு இல்லாமலும பேசத் தெரிந்து கொள்ளாத ஒருவர், முதலமைச்சராக இருந்து வருவது தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கு அவமானமாகும் என்பதுடன், வருங்காலத் தமிழ் மரபுக்கும் அபவாதமாகும்.

சாதாரணப் பொதுமக்கள் கூட்டத்தில் பேசுவதற்கெனவும், விஷயமறிந்த வியாபாரிகள் மத்தியில் பேசுவதற்கெனவும், வெவ்வேறு தனித்தனி நாக்குகளைப் பெற்றிருக்கிற பெருமான் போலும், தமிழர்களுக்கு வந்துவாய்த்த முதலமைச்சர் கனம் காமராசர்! சட்டசபையில் பேசாமடந்தையாக இருப்பது போன்றே, மக்கள் கூட்டத்திலும் இந்த மாமேதை மவுனியாக இருந்துவிடக் கூடாதா? அப்பொழுது, இவ்வாறு முரண்பட ஊளையிட வேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்பட்டு இருக்காதே? நமக்கும், இவருக்கு நாக்கு — ஒன்ரு? இரண்டா? எனக் கேட்கவேண்டிய நிலையும் ஏற்பட்டிருக்காது.

விவசாயிகள் வாழ்வில் தெளிவற்ற நிலைமை!

அமைச்சர்கள் ஒப்புகின்றனர்

புதுடில்லி, ஏப். 9—

"விவசாய பெருமக்களின் தொல்லைகள் தீர்ந்துவிடவில்லை என்று புகார்கள் கூறப்பட்டன; அதிகாரிகளின் உபத்திரவங்கள், லேவாதேவிக்காரர்களின் தொல்லை, நீதிமன்றங்களின் அலட்சியம் ஆகியவை சம்பந்தப்பட்ட வகையில் அவர்களுக்கு இன்னும் விமோசனம் ஏற்படவில்லை என்பதை ஒப்புக்கொள்கிறேன்; ஆனல், அது விவசாய இலாகாவின் தவறல்ல,"

என்று, விவசாய இலாகா அமைச்சர் டாக்டர் தேஷ்முக் மக்கள் சபையில் குறிப்பிட்டுள்ளார்.

உணவு அமைச்சர், குடியானவர்கள் நிலைபற்றிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகவே அவதியுற்றுவரும் இந்திய விவசாயிகளின் நிலையை ஐந்தாறு ஆண்டுகளில் தீர்த்துவிடுவதென்பது சாத்தியமானதன்று; என்றுலும், அவர்களுடைய நிலையை உயர்த்தத் துவங்கிவிட்டோம்; இந்த வேலை தொடர்ந்து நடைபெறும்.

"நிலச்சுவான்தார்களிடம் விவசாயிகள் தாமாகவே நிலங்களைத் திருப்பிக் கொடுத்துவிட்டதாகக் கூறப்படுகிறது; சில இடங்களில் இம்மாதிரி நடந்திருப்பதாகச் சொல்லப்படுவதை சர்க்கார் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களுக்கு மீண்டும் நிலம் தரப்படும்."

கிராமப் பல்கலைக் கழகங்கள் துவங்கும்?

இந்தியா முழுமையிலும் சுமார் 10 கிராமப் பல்கலைக் கழகங்கள் துவங்குவதற்கு இந்திய அரசாங்கம் முடிவு செய்திருப்பதாகவும், அடுத்த ஆண்டு முதல் இப்பல்கலைக் கழகம் தனது வேலையைத் துவங்கும் என்றும் தெரிகிறது.

மதுரை மாவட்டத்தில் திண்டுக்கல் அருகே உள்ள காந்தி கிராமத்தில் ஒரு கிராமப் பல்கலைக் கழகம் இடம் பெறும் என்றும், இது சம்பந்தமான திட்டம் ஒன்று அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்துவருவதாகவும் தெரிகிறது.

வசதியுள்ள மின்சார இரயில்கள்

சென்னையில் ஓட ஆரம்பிக்கும்

ஏப்ரல் 13-ந் தேதி முதல், சென்னை கடற்கரை—தாம்பரம் இரயில்வே நிலையங்களிடையே மின்சாரப் பாதையில், உருக்கிலாலானதும், இத்தாலியில் தயாரிக்கப்பட்டதுமான புதுவகை மின்சார வண்டிகள் ஓட ஆரம்பிக்கும்.

இவ்வண்டியில், உட்காரும் வசதிகள் அதிகமென்றும், 306 பேர் பிரயாணம் செய்யக்கூடுமென்றும், இப்போதுள்ள மின்சார வண்டிகளில் 250 பேர்களேதான் பிரயாணம் செய்யக்கூடுமென்றும் அறிவிக்கபபட்டுள்ளது.

எவ்வளவு தெரியுமா?

பாகிஸ்தான் பார்லிமெண்டு, உறுப்பினர்களுக்கு மாதம் ரூ. 400 சம்பளத்துடன், சபை கூடும் நாட்களில் நாளொன்றுக்கு ரூ. 21 அலவன்சும் கிடைக்கும். இதற்கான . சட்டம் இப்போது தான் சபையில் நிறைவேற்றப்பட்டது. தற்போது, சபை நடைபெறும் நாட்களில் மட்டும் ரூ. 45 அளிக்கப்படுகிறது.

கொழும்புத் திட்டத்தின்கீழ், 1955—56-ம் ஆண்டில், 22 வெளிநாட்டு நிபுணர்களின் உதவி இந்தியாவுக்குக் கிடைத்தது; 129 இந்தியர்கள் பயிற்சி பெறுவதற்காக வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டனர்.

தங்கத்தைவிட முக்கியத்துவம் வாய்ந்தது பழுப்பு நிலக்கரி

டெல்லி சர்க்கார் கொள்கை பற்றி மந்திரி மாளவியா

புதுடில்லி, ஏப். 10—

"நிலக்கரி, பெட்ரோலியம் அல்லது பழுப்பு நிலக்கரி இவற்றிற்குத் தருகிற அளவு முக்கியத்துவத்தை தங்கத்திற்கு நாங்கள் தருவதில்லை.

"அதிலும், தங்கத்தைவிட பழுப்பு நிலக்கரி மிக முக்கியமானதாகும். யாராவது சுரங்கத்தில் தங்கம் உற்பத்தி செய்ய எண்ணினுல் தாராளமாகச் செய்யட்டும்; அவர்களுக்கு சர்க்கார் தன் ஒத்துழைப்பைத் தரும். அவ்வளவுதான்"

என்று, டில்லி மந்திரி மாளவியா மக்கள் சபையில் தெரிவித்திருக்கிருர்.

'கோலார் தங்கவயலை தேசியமயமாக்குவது பற்றி சர்க்கார் முடிவெடுத்துவிட்டதா?' என்று கேள்வி கேட்கப்பட்டபோது, 'சீக்கிரமே ஏதாவது ஒரு முடிவு மேற்கொள்ளப்படும்' என்றும் அவர் தெரிவித்திருக்கிருர்.

பரிசீலனையில் இருக்கிறதாம்!

போலீசாரின் குழந்தைகளுக்கு அவசர கால மருத்துவ வசதியும், திருமணச் செலவு ஆகியவைகளுக்கான பண உதவியும் அளிப்பதற்கான திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருப்பதாக, சென்னை மாகாண தலைமைப் போலீசு அதிகாரி, கோவையில் கூறியுள்ளார்.

குடியரசு தலைவர் முன் ஆர்ப்பாட்டம்

பாடியாலாவில் எண்ணற்ருேர் கைது

பாடியாலா, ஏப். 11—

குடியரசுத் தலைவருக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் செய்த எண்ணற்ருேரை போலீசார் கைது செய்திருக்கின்றனராம்.

பெப்சு சர்க்காருக்கு எதிராக, பெண்களும்கூட குழந்தைகளைக் கையில் தூக்கிக்கொண்டு ஆர்ப்பாட்டத்தில் பங்கு கொண்டனர் என்று தெரிகிறது.

மாலெர் கோத்லா என்ற ஊரிலிருந்து ஆண்களும், பெண்களும் ஏராளமான அளவில் பாடியாலாவிற்கு வந்து, குடியரசுத் தலைவர் அங்கு வந்தபோது, கூடி நின்று கோஷங்கள் எழுப்பியிருக்கின்றனர்.

அவர்களின் கோரிக்கை எல்லாம், தங்கள் ஊரில் உள்ள மின்சார வினியோக நிறுவனத்தின் 'லைசென்ஸை' ரத்து செய்ய வேண்டுமென்பதுதான் என்றும் கூறப்படுகிறது.

கைதானவர்களில் மாலர் கொத்லா நகர மின்சார உபயோகிப்போர் சங்கச் செயலாளரும் ஒருவராவார்.

போலீசார், இந்த ஊரிலிருந்து பாடியாலாவிற்கு இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் வந்து சேராமல் தடுப்பதற்காக என்னவெல்லாம் செய்ய முடியுமோ அதையெல்லாம் செய்து பார்த்தனர். வழியில் இடைமறித்து மடக்கி, வந்த பஸ் வண்டியிலேயே திருப்பி அனுப்பிப் பார்த்தனர். இப்படியெல்லாம் செய்தும், குடியரசுத் தலைவர் முன் ஆர்ப்பாட்டம் செய்யாமல் தடுக்கமுடியவில்லையாம்!

உறுப்பிழந்தவருக்கு உயிருடனிருந்து உழைத்தார்

இறந்த பிறகும் யுவதிகளுக்குக் கண்ணளித்தார்

டான் கார்லோ கினோஷி பாதிரியாரின் சேவை

மிலான், ஏப். 10—

பிறந்தது முதல் பதினெட்டு ஆண்டுக் காலம் வரை அமாபைல் பாடிஸ் டெலா என்ற யுவதி கண்ணற்றக் குருடியாகவே வாழ்ந்து வந்தாள். அவளைப் போலவே ஆஞ்சிலோ கொலாகிராண்ட் என்ற மற்ருெரு இருபத்தொரு வயதடைந்த அணங்கும் பிறவிக் குருடியாகவே இருந்துவந்தாள்.

அவர்கள் இருவரும் கண் பார்வைப் பெற்றுள்ளனர்.

ஆண்டவன் அருளாலும் அல்ல—தோத்திர மகிமையாலும் அல்ல — அவ்விருவரும் பார்வை பெற்றுள்ளது.

டான் கார்லோ கினோஷி என்ற வயது முதிர்ந்த கத்தோலிக்கப் பாதிரியாரின் இரக்கச் சிந்தனையே அந்த யுவதிகள் பார்வை பெற்று, உலகக் காட்சி இன்பங்களைத் துய்ப்பதற்குக் காரணமாக விளங்கி இருக்கிறது.

அவர் உயிருடன் இருக்கும் வரை உறுப்பிழந்துத் தவிக்கும் மக்களின் நலத்திற்காகவே உழைத்துவந்தார். இறந்த பிறகும், அவர், அவ்விரு குருட்டுப் பெண்களுக்கும் கண்ணளிப்பதின் மூலம் புகழ் பெற்றுவிட்டார்.

தாம் சாகும்பொழுது, தமிரு கண்களையும், கண்ணிழந்துத் தவிப்பவர்களுக்குக் கண்ணளிப்பதற்குப் பயன்படுத்தும்படி, அப்பாதிரியார், ஒரு முறிச்சீட்டை எழுதிவைத்திருந்தாராம்.

அதன்படி, இறந்த அவருடைய இரு கண்களையும் தோண்டி எடுத்து, காட்சியின் பயன் தெரியாது இருளில் கிடந்த இரு கன்னிப் பெண்களுக்கும் பொருத்தப்பட்டதாம். அவ்விருவரும் பார்வை பெற்றனர். அதில் ஒருத்தி, டான் கார்லோவின் கல்லறைக்குச் சென்று, அதன்மீது மலர் மாலையிட்டு மகிழ்ந்தாளாம்.

திருவள்ளுவர் — 'ஒரு தத்துவ ஞானி'

புதுக்கோட்டை, ஏப். 10—

"வள்ளுவரை ஓர் தத்துவ ஞானி என்று எவரும் வெளியிட்டார்களில்லை; காரணம், தமிழர்கள் அவரது உண்மைத் தத்துவத்தை உள்ளவாறு அறயாததே. மேலும் அவர், தமது கருத்துக்களைக் கவி மூலமாகக் கூறியுள்ளதால் அவரை ஒரு புலவர் என்றுதான் கண்டார்களே தவிர, சாக்ரடீஸ், அரிஸ்டாடில் போன்ற மெய்யுணர்வானவரென்று காணவில்லை. திருவள்ளுவர் ஒருவர்தான் தமிழகத்தின் தலைசிறந்த தத்துவ ஞானி. அவருக்குப் பின், தமிழகத்தில், தத்துவ ஞானிகள் தோன்றவில்லை. காரணம், பின்னுல் தோன்றியவர்கள் அத்தனை பேரும் சமய வழியிலேயே தங்கள் கருத்துக்களைச் செலுத்திவிட்டனர்.

"இவ்வுலகம் சிந்தனையாளர்களாலேயே இயங்கிக் கொண்டிருக்கிறது; நம்நாட்டிற்குத் 'தமிழகம்' என்ற பெயரே சாலப்பொருத்தமுடையது. 'சென்னை இராஜ்யம்' ஆங்கிலேயர்களால் இடப்பட்ட பெயராகும். தொல்காப்பியம், சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்கள் 'தமிழகம்' என்றே நம் நாட்டைக் குறிப்பிடுகிறது,"

என்று, பேராசிரியர் சி. இலக்குவனுர் அவர்கள், புதுக்கோட்டை திருக்குறள் கழகச் சார்பில், 8—4—56-ல், நடைபெற்ற இலக்கியக் கூட்டத்தில் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

மணிக்கு 18,000 மைல் வீதம் குறிவைத்து வீசப்படும் குண்டுகள்

வானவெளியில் 600 மைல் உயரத்தில் பறந்து செல்லும்

5,000 மைல்களுக்கு அப்பாலுள்ள இடத்தைத் தாக்குவது சாத்தியமாகிவிடும்?

நியூயார்க், ஏப். 11—

சூரிய கோளத்தினுடைய மேல் தளத்தின் வெப்ப நிலைபோல் ஒன்றரை மடங்கு வெப்ப நிலைமை (அதாவது 9,000 டிகிரி செண்டிகிரேடு) இங்குள்ள ஆராய்ச்சிக் கூடமொன்றில் செயற்கை முறைகளால் உண்டாக்கப்பட்டு, ஆராய்ச்சிகள் நடைபெற்றுவருகின்றன.

மணியொன்றுக்கு 18,000 மைல் வீதம் குறிவைத்து வீசப்படும் குண்டுகள் செல்வதற்குத் தேவையான சூழ்நிலையும், வெப்ப நிலையும் இந்த ஆராய்ச்சிக்கூடத்திலேயே உருவாக்கப்பட்டுள்ளதாம்!

ஒரு கண்டத்திலிருந்து இன்னொரு கண்டத்தின்மீது குறிவைத்து வீசும் குண்டு ஒன்றை ஏவி விடுவதற்கு இத்தகைய ஆராய்ச்சி அவசியமாகிறது. 5,000 மைல்களுக்கு அப்பாலுள்ள இடத்தைக் குறிப்பிட்ட ஓரிடத்திலிருந்து நீர்வளிக் குண்டினுல் குறிவைத்துத் தாக்குவதைச் சாத்தியமாக்கும் பொருட்டே இந்த ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது; இந்த ஆராய்ச்சிகளின்படி, ஓரிடத்திலிருந்து 5,000 மைல்களுக்கு அப்பாலுள்ள மற்ருேரிடத்தைத் தாக்க நீர்வளிக்குண்டு ஒன்று ஏவப்படுமாளுல், அக்குண்டு வானவெளியில் உயர்ந்தபட்சம் 600 மைல் உயரத்தில் பறந்து செல்லுமாம். ஏவப்பட்ட இடத்தை அடைந்தவுடனே அக்குண்டு பூமியைநோக்கி விழத் தொடங்குமாம்; அப்படி விழுகின்ற குண்டு வாயுமண்டலத்தைக் கடக்கும்பொழுது, பயங்கர வேகத்துடன் வாயுப் படிவங்களுடன் உராய்கிறதாம்! அச்சமயத்தில் உண்டாக்கக்கூடிய சூடு (வெப்பம்) அந்த குண்டையே உருக்கி, ஆவியாக்கிவிட முடியுமாம்! அவ்வளவு கடுமையான சூடு உற்பத்தியாகிறதாம்! ஆகவே அத்தகைய சூட்டில் குண்டு சிக்கி ஆவியாகிவிடாமல் தடுக்கும் நோக்கத்துடனேயே இந்த ஆராய்ச்சிகள் இவ்வளவு மும்முரமாக நடைபெறுகிறதாம்!

கொடிய சூட்டிலிருந்து பூமியை நோக்கி விழும் நீர்வளிக் குண்டைப் பாதுகாப்பதற்குரிய சாதனமொன்றைத் தயாரிப்பது இந்த ஆராய்ச்சியின் நோக்கமாம். அத்தகைய சாதனம் தயாராகிவிட்டாலோ, பிறகு ஒரு கண்டத்திலிருந்தே மற்ருெரு கண்டத்திலுள்ள நாடொன்றினைத் தாக்குவதென்பது எளிதாகிவிடுமாம்.

325 பேருக்கு வேலையிலிருந்து சீட்டு!

ரத்னகிரி, ஏப். 11—

நிர்ணயிக்கப்பட்ட வேலைகள் முடிந்துவிட்டன என்பதால், இனும் 'சர்வே' இலாகாவைச் சேர்ந்த சுமார் 325 பேர்கள்—பயிற்சி பெற்றவர்களும் பயிற்சி பெருதவர்களுமாக—வரும் மே 1-ந் தேதியிலிருந்து வேலையிலிருந்து நீக்கப்படுவர் என்று, 'நோட்டீஸ்' தரப்பட்டிருக்கின்றனராம்.

அகதிகளாயும், பிற்பட்ட வகுப்புகளைச் சேர்ந்தவர்களாயுமிருப்போரே இதர இலாக்காக்களில் பணிபுரியச் சேர்த்துக்கொள்ளப்படுவர் என்றும் கூறப்படுகிறது.

அரியதோர் சாதனைக்கு அடிகோலுகின்றனர்!

63,000 அடிமுதல் 90,000 அடி வரையில் உள்ள உயரத்திலிருந்து பாரச்சூட் மூலமாகக் குதிப்பதற்கு ஒரு விசேட பலூனை அமெரிக்க விமானப்படை தற்போது நிர்மாணிக்கிறதாம்!

பாரச்சூட்டில் இறங்குகிறவர்கள் பிராண வாயு அடைத்துள்ள முகமூடி தரித்திருப்பார்களாம்.

கேள்விக்குப் பதிலிறுக்கத் தெரியாத மந்திரி

சபைத் தலைவர் உதவினாராம்

கேள்விக்குப் பதில் கூறத் தெரியாது விழித்த மந்திரிக்கு சபைத் தலைவர் உதவிய நிகழ்ச்சி டெல்லி மக்கள் சபையில் நடைபெற்றிருக்கிறது.

'உணவுப் பொருள்கள்மீது விற்பனை வரி விதிப்பதற்கு முன், உ. பி. சர்க்கார் மத்திய சர்க்காரைக் கலந்தாலோசிக்கவில்லை என்பது உண்மையா? அப்படிக் கலந்தாலோசிக்க வேண்டியது, அத்தியாவசியப் பொருள்கள் விநியோகச் சட்டத்தின்படி அவசியமானதல்லவா?"

என்று, பெரோஸ் காந்தி என்ற எதிர்க் கட்சி உறுப்பினர், உணவு மந்திரி ஏ. பி. ஜெயினைப் பார்த்துக் கேட்டார்.

ஜெயின் அப்போதுதான், உணவு இலாகா மானியக் கோரிக்கையைத் தாக்கல் செய்து பேசிவிட்டு உட்கார்ந்திருந்தார்.

உறுப்பினர் அவசர அவசரமாக இப்படி ஒரு கேள்வியை எழுப்பவே, மந்திரி என்ன பதில் கூறுவது என்று தெரியாமல் விழித்தாராம்!

உடனே சபைத் தலைவர் அவருக்கு உதவி புரிந்தாராம் எப்படித் தெரியுமா? 'மந்திரி விரும்பாவிட்டால், கேள்விக்குப் பதில் சொல்லத் தேவை இல்லை,' என்ருராம்!

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம்: அறிக்கை—6/56

உறுப்பினர் சேர்த்தல்

காலம் நீடிக்கப்படுகிறது

பல கிளைக் கழகங்களிலிருந்து உறுப்பினர் சேர்த்த தாள்கள், தலைமை நிலையத்துக்கு வந்து சேருவதில் ஏற்பட்டுள்ள தாமதத்தை முன்னிட்டும், மேலும் சில ஊர்களில் உறுப்பினர் சேர்க்கும் பணி இன்னும் முடிவுருததாலும், உறுப்பினர் சேர்க்கும் காலம் மே 15-ந் தேதி வரையில் நீடிக்கப்படுகிறது.

எனவே 15 5—56-ம் நாளை உறுப்பினர் சேர்ப்பதற்கான இறுதி நாளாகக் கொண்டு, உறுப்பினர் சேர்க்கும் விண்ணப்பத் தாள்களைத் தலைமை நிலையத்திற்கு அனுப்பிவைக்கும்படி கிளைக் கழகச் செயலாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள்.

"அறிவகம்," சென்னை—13, 10-4-1956

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

16 மாதங்களில் 15,000 பேர் படுகொலை!

பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறை

அல்ஜீரியா என்ற வட ஆப்பிரிக்க நாடு, தொடர்ந்து தங்கள் ஆதிக்கத்திற்குட்பட்ட காலனியாக நீடிக்க வேண்டும் என்ற ஏகாதிபத்திய வெறியின் விளைவாகப் பிரெஞ்சுக்காரர்கள், அங்கே பல்லாயிரக்கணக்கானவர்களைக் கடந்த 16 மாதகாலத்தில் கொன்று குவித்திருக்கிருர்களாம்.

'தீவிரவாதிகளை அடக்குகிருேம்' என்ற பெயரால், பிரெஞ்சு இராணுவத்தினர் மட்டும் சுமார் 15,000 பேர்களின் உயிரைக் குடித்திருப்பதாகத் தெரியவருகிறது.

சர்க்கார், இப்படிக் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 5,724தான் என்று கூறுகிறதாம்.

கடந்த 1954 அக்டோபர் 31-ந் தேதி துவங்கிய அல்ஜீரிய தீவிரவாதிகளின் கிளர்ச்சி, இத்தனை கொடூரமான அடக்குமுறைகளைக் கண்ட பிறகும் நின்றபாடில்லை என்பதை படுகொலைகளைத் தணிந்து நடத்தும் ஏகாதிபத்தியவாதிகள் உணரவேண்டுவது அவசியமாகிறது என்று, பிற்போக்காளர்கள்கூடக் கருதுகின்றனராம்.

இப்படிக் கொலை செய்யப்பட்டவர்களன்னியில் சுமார் 1,000 பேர் வரை சிறைபிடிக்கப்பட்டிருக்கின்றனராம், பிரெஞ்சு இராணுவத்தினரால்!

'ஜனநாயக நாட்டில் அர்த்தால் நடத்துவது முறையானதே'

'உத்திரப் பிரதேச முதன் மந்திரி கருத்து

ஒரு வார கால கடையடைப்பிற்கு சர்க்கார் பணிவு?

"அர்த்தால்கள், ஆர்ப்பாட்டங்கள், கடையடைப்புகள் எல்லாம், எதிர்ப்புகளைத் தெரிவிப்பதற்கு ஒரு ஜனநாயக நாட்டில் அனுமதிக்கப்பட வேண்டியவைதான்; ஆனால், அவை, மக்களுக்கு எவ்விதக் கஷ்டங்களையும் தராதனவாயும், பலாத்காரமின்றியும் அமைய வேண்டும்"

என்று, உத்திரப் பிரதேச முதன் மந்திரி டாக்டர் சம்பூர்ணனந்த் கருத்தறிவித்திருக்கிறார்.

உ. பி. மாகிலத்தில் கடந்த ஏப்ரல் 2-ந் தேதி முதல் ஒரு வார காலமாக மாகிலமெங்கும் அர்த்தால் கடைப்பிடிக்கப்பட்டது நினைவிலிருக்கலாம்.

இந்த அர்த்தால், விற்பனை வரி திருத்தச் சட்டம் ஒன்று, உணவுப் பொருளுக்கு விற்பனை வரி விதிப்பை அதிகரிப்பதற்காக கவர்னரால் பிறப்பிக்கப்பட்டதை எதிர்த்து நடைபெற்றது.

அர்த்தாலுக்குப் பிறகு பத்திரிகையாளரிடம் பேசிய முதன் மந்திரி,

"விற்பனை வரி அதிகரிப்பிற்கான சட்டம் இறுதியானதல்ல; வரி மீண்டும் குறைக்கப்படலாம். மசோதா ஒன்று சீக்கிரமே சட்டசபையில் கொண்டு வரப்படவிருக்கிறது. அதில், இந்தச் சட்டத்தின் அம்சங்களே இடம் பெற்றிருக்கும் என்பதல்ல,"

என்று குரலைத் தாழ்த்திக்கொண்டு பேசியிருக்கிறார்.

அப்போதுதான், அர்த்தால்,ஜனநாயகத்தில் இடம்பெறக் கூடியதுதான் என்றும் ஒப்புக்கொண்டிருக்கிறார், அந்த முதன் மந்திரி.

"அர்த்தால் என்ற பெயரால், ஏழை மக்கள் உணவுப் பொருள்கள், மற்றும் வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களைப் பெருது தடுக்கப்படும்போது சர்க்கார் அந்த விவகாரத்தில் தலையிடவேண்டியுள்ளது. நடைபெற்ற அர்த்தாலின்போது 144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டதற்குக் காரணம் எல்லாம், சாதாரண மக்களுக்கு அவர்களின் வழக்கமான வேலைகளைக் கவனிப்பதற்குப் பாதுகாப்பளிப்பதற்குத்தான்,"

என்றும் அந்த முதன் மந்திரி கூறியிருக்கிறார்.

ஒரு வார கால அர்த்தாலை நடத்தியவர்கள், உ. பி. வியாபாரிகளாவர்.

இந்தியாவில் அணு உலை

பம்பாயிலிருந்து 13—மைல் தூரத்திலுள்ள டிராம்பே தீவில், 110 ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தில் அணு சக்திக் கமிஷன் தலைமைக் காரியாலயம் அமைக்கப்படும்.

இந்தியாவில் நிறுவப்படும் முதலாவது அணு உலை இவ்வாண்டு மத்தியில் வேலை தொடங்கும்! கானடா நன்கொடையாக அளித்த அணு உலை 1958-ல் வேலை செய்யத் தொடங்கும்.

தனி ஒரு கும்பலின்...

(முதல் பக்கத் தொடர்ச்சி)

லால் நிர்வகிக்கப்பட்டு வரும் பிரஸ்தாப கோயில் போன்ற அனைத்துக்கும் பொருந்தக் கூடியதேயாகும். எனவே, மாவட்ட நீதிபதியின் தீர்ப்பு சட்டத்திற்குட்பட்டதேயாகும்.

ஆனால், அக்கோயிலில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசித்திர நடைமுறையின் காரணமாக, கவுட சரஸ்வதி பார்ப்பனர்களுக்கு சில விசேஷ சலுகைகள் பெறுவதற்கு உரிமை உண்டு. உதாரணமாக, சந்தர்ப்பனை நடைபெறும் நேரத்தில் கவுட பார்ப்பனர் நீங்கலாக வேறு இந்துக்கள் எவரும் ஆலயத்திற்குள் நுழைவது கூடாது. அதேபோன்று தினசரி மகா நைவேத்தியம் நடைபெறும் நேரத்திலும், அந்தப் பார்ப்பனக் குடிகளைச் சேர்ந்தவர்கள் நீங்கலாக வேறு எவரும் நுழைவதைத் தடுக்க தர்ம கர்த்தாக்களுக்கு அதிகாரம் இருக்கிறது. அதுவுமன்றி, ஒவ்வொரு ஆண்டும் ரதோற்சவ காலமான சந்தர்ப்பனை நடைபெறும் ஐந்து நாட்களிலும், அப்பார்ப்பனக் குடிகளைத் தவிர, வேறு இந்துக்களை கோயிலுக்குள் நுழைய விடாது தடுக்க அவர்களுக்கு உரிமை இருக்கிறது. இவை நீங்கலாக, மற்ற நேரங்களில், மற்ற நாட்களில் அக்கோயில் இந்துக்களாக உள்ள மற்றவர்களை நுழைய விடாது தடுக்க வேண்டும் என்பதற்குச் சென்னை சட்டம்செல்லக்கூடியதல்ல என்பதற்கும், எந்தவித நியாயமும் இருப்பதாகத் தெரியவில்லை. மேற்கூறிய திருத்தங்களுடன் கவுட பார்ப்பனர் வழக்கு தள்ளப்பட்டு விட்டது.

கழகக் கூட்டம்

★

பழைய கூடலூர்:
(தஞ்சை மாவட்டம்)
தி. மு. கழகந் துவக்க விழா
14—4—56 மாலை 6 மணிக்கு
தலைவர்:
இரே. இராசமாணிக்கம்
பேசுவோர்:
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
என். சிட்டப்பா
கோ. சி. மணி

சென்னை—நூலை தி. மு. க. செயற்குழு உறுப்பினர்கட்கு:

14—4—56 காலை 10 மணிக்கு கழக மனையில் செயற் குழு கூடும், அதுபோது, கழக—பள்ளி வரவு-செலவு கணக்குகளும், மாநில மாநாட்டிற்குப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுத்தலும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

பழனி நகர தி.மு.க. பொதுக் குழு உறுப்பினர்கட்கு:

14—4—56 காலை 10 மணியளவில், கழகப் புதிய பொதுக் குழு உறுப்பினர்கள் கூட்டம், பெரியாவுடையார் கோயில் தோப்பில் நடைபெறும்.

வடாற்காடு மாவட்ட தி.மு. கிளைக் கழகச் செயலாளர்களுக்கு:

தி. மு. கழக மாநில மாநாடு குறித்து சினிமாக்களில் விளம்பரம் செய்வதற்குரிய 'சிலைடு'களை இலவசமாக செய்து தர வேலூர் சினி ஆர்ட்ஸ் உரிமையாளர் டி. எஸ். மணி அவர்கள் ஒப்புக்கொண்டுள்ளார். வடாற்காடு மாவட்ட கிளைக் கழகச் செயலாளர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதினால், 'சிலைடு'கள் அனுப்பிவைக்கப்படும்:—

முகவரி: டி. எஸ். மணி, சினி ஆர்ட்ஸ், சிலைடு-பிளாக் மேர்க்கர்ஸ், எண். 34/9, பெங்களூர் ரோடு, வேலூர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திருவொற்றியூர் (தாங்கல்) இரவுப் பள்ளி நிதிக்காக

சிறப்புக் கூட்டம்

15-4-56 ஞாயிறு மாலை 5-30 மணிக்கு

கோகலே மண்டபத்தில்

நடைபெறும்

கே. எம். கண்ணபிரான்

தலைமை வகிப்பார்

அண்ணா

அவர்கள் சொற்பொழிவாற்றுவர்

கழக பேச்சாளர்கள் கலந்துகொள்வர்

★

நன்கொடை: ரூ. 1, அணு 8.

ஏ. வி. ஆறுமுகம்—அமைப்பாளர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

'தீச்சுடர்'

'தீச்சுடர்'—மே திங்கள் மூன்றும் நாள் வியாழக்கிழமையிலிருந்து வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் முடியும் நிலையிலிருக்கிறது. ஏஜெண்டு நிபந்தனைத் தாள்களைக் கேட்டு எழுதியிருக்கும் தோழர்களுக்கு ஏப்ரல் 16-ந் தேதி 'பாரங்களை' அனுப்பிவைக்கப்படும். அதில் விளக்கங்கள் தரப்பட்டிருக்கிறது. அதன்படி 'பாரத்தை'ப் பூர்த்திசெய்து டிபாசிட் தொகையை கிழ்க்காணும் அலுவலக முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டுகிறோம்:—

சி. பி. சிற்றரசு, ஆசிரியர், 'தீச்சுடர்', 31, மையப்ப முதலி தெரு, சென்னை 1.

24,000 ஆலைத் தொழிலாளருக்குப் போனஸ்

4 மாதச் சம்பளம் தர ஆர்வி ஆலை நிர்வாகிகள் முடிவு

மதுரை, தூத்துக்குடி, அம்பாசமுத்திரம் ஆகிய ஊர்களில் உள்ள ஆர்வி நூற்பு ஆலைத் தொழிலாளர்கள் சுமார் 24,000 பேர்களுக்கு, 1955-ம் ஆண்டிற்கு நான்கு மாதச் சம்பளம் போனசாகத் தரப்படும் என்று தெரிகிறது.

இதற்கான ஒப்பந்தம் ஆலை நிர்வாகிகள்—தொழிலாளர்கள் பிரதிநிதிகளிடையே கையெழுத்தாகி விட்டதாம்.

ரூ. 35 இலட்சம்வரை போனசாகத் தரப்படும் என்றும், இந்தத் தொகை, ஒரே தடவையில் இந்த மாதம் மூன்றும் வாரத்திற்குள் தரப்பட்டுவிடும் என்றும் தெரிய வருகிறது.

மராட்டியத்துடன் பம்பாயைச் சேர்க்க!

கிளர்ச்சியிலீடுபட்ட 18 பேர் கைது

பம்பாயை மராட்டியத்துடன் சேர்க்க வேண்டுமென ஐதராபாத் மாநில சட்டசபை முன் ஆர்ப்பாட்டம் செய்ய ஊர்வலமாகப் புறப்பட்ட 18 பேர்களை இன்று போலீசார் கைது செய்தனராம்.

இந்த ஊர்வலத்தை, பி. சோ. கட்சியினரும், கம்யூனிஸ்டுகளும் நடத்தினராம்.

சட்டசபைக்கு 300 கெஜ தூரத்தில் இவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டபோது, சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர்கள் இவர்களைச் சந்தித்து, போலீஸ் வளையத்தை மீறி தொடர்ந்து செல்லுமாறு கூறியதாகவும், அதன் பேரில் தொண்டர்கள் முன்னேறிச் செல்ல முயன்றபோது போலீசார் இவர்களைக் கைது செய்ததாகவும் கூறப்படுகிறது.

ஆளும் கட்சியினர் 'சரிந்து' விட்டனர்!

பண்டாரநாயகா பதவி ஏற்கிறார்

கொழும்பு, ஏப். 12—

அந்நிய ஆட்சியிலிருந்து இலங்கை விடுதலையடைந்தது முதல் கடந்த ஒன்பது ஆண்டுகளாக ஆட்சிபீடத்திலிருந்து வந்த கொத்தலாவலை சர்க்கார் (ஐக்கிய தேசியக் கட்சி) விலகிக்கொண்டு விட்டது.

மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவரான பண்டாரநாயகா மந்திரிசபை அமைக்கிறார்.

மக்கள் சபையில், முன்பு 54 இடங்கள் பெற்றிருந்த ஐக்கிய தேசியக் கட்சி, 'இலங்கையில் சிங்களம்தான் ஆட்சி மொழி' என்ற பிரச்சினை மீது பொதுத் தேர்தல் நடத்துவது என்று கொத்தலாவலை சர்க்கார் முடிவு செய்து, மறு தேர்தலில் போட்டியிட்டு, 46 இடங்களை இழந்துவிட்டது; போட்டியிட்ட 11 மந்திரிகளில் பிரதம மந்திரியும், கல்வி மந்திரியும்தான் வெற்றி பெற்றனர்; சுயேச்சையாகப் போட்டியிட்ட ஒரு மந்திரியும் தோல்வியுற்றார்.

கொத்தலாவலை சர்க்காரில் வர்த்தக மந்திரியாக இருந்து, கருத்து வேற்றுமையின் காரணமாக விலகிவிட்ட ஆர். ஜி. சேனநாயகா, இரு தொகுதிகளில் வெற்றி பெற்றார்.

'இலங்கையில் தமிழர் வாழும் பகுதிகளைப் பிரித்துத் தனித் தமிழ் நாடு அமைக்க வேண்டும்' என்று கோரும் பெடரல் கட்சிக்கு இப்போது பத்து இடங்கள் கிடைத்திருக்கிறது; முன்பு இக்கட்சிக்கு இரண்டு இடங்கள்தான் இருந்தது.

ஏற்றுமதித் தடை விதிக்கப்பட்ட டிராக்டர்!

சீனாவிற்கு பிரிட்டன் அனுப்பும்

செஞ்சீனாவிற்கு ஏற்றுமதி செய்யக்கூடாது என்று மேற்கு நாடுகள் தடைவிதித்துள்ள சாமான்களில் ஒன்றான டிராக்டர்களை இப்போது பிரிட்டன், செஞ்சீனாவிற்கு ஏற்றுமதி செய்யும் என்று தெரியவருகிறது.

ஒரு குறிப்பிட்ட அளவு எண்ணிக்கை மட்டுமே டிராக்டர்கள் அனுப்பப்படுமாம்.

'இராணுவ முக்கியத்துவம் உள்ள சாமான்களை சீனாவிற்கு அனுப்பக்கூடாது' என்று, ஐ. நா. விதித்திருக்கும் தடையைக் கடைபிடிக்கும் நாடுகள் டிராக்டர்களையும் அனுப்பலாகாது என்று தீர்மானித்திருக்கின்றனராம்.

'போஸ் உடலை சுட்டெரித்த சாம்பல் என்னிடம் தரப்பட்டது'

'சைகோனில்தான் முடிவாக உயிருடன் பார்த்தேன்'

புதுடெல்லி, ஏப். 11—

"ஆசாத் இந்த் தற்காலிக அரசாங்கத்தில் விளம்பர மந்திரியாக இருந்த எஸ். ஏ. அய்யர் என்பவர், சுபாஷ் சந்திர போஸ் மரண விசாரணைக்குழு முன் சாட்சியம் கொடுத்தார்.

அவர் கூறியதாவது:—

"ஜப்பானிய ஆகாய விமானம் ஒன்றில், 1945 ஆகஸ்டு மூன்றாவது வாரத்தில் போஸ் சென்ற பொழுதுதான், சைகோனில் நான், அவரை முடிவாகச் சந்தித்தேன். அதற்கு நான்கு நாட்கள் கழித்து நானும் ஜப்பானிய அதிகாரிகளால் டோகியோவிற்கு அழைத்துச் செல்லப்பட்டேன். தைபாவில் நடைபெற்ற விமான விபத்தின் காரணமாக ஏற்பட்ட படுகாயத்தின் விளைவாக நேதாஜி இறந்தார் என்றும், அவர் சடலம் சுட்டெரிக்கப்பட்டு விட்டது என்றும் எனக்கு அறிவிக்கப்பட்டது. சைகோனிலிருந்து போஸ் புறப்பட்ட பொழுது, அவருடன் விமானத்தில் சென்ற கர்னல் அபிபுர் ரஹிமான், சுபாஷ் உடலை சுட்டெரித்துச் சாம்பலை என்னிடம் கொடுத்தார்."

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

என். வி. நடராசன் 16/99 அம்மன் கோயில் தெரு
ஆசிரியர்: 'திராவிடன்' சென்னை-1

திருமண அழைப்பிதழ்

பேரன்புடையீர்,

வணக்கம். நிகழும் 15—4—1956 (திருவள்ளுவர் ஆண்டு 1987 சித்திரைத் திங்கள் 3-ம் நாள்) ஞாயிறு காலை 9-மணிக்கு, சென்னை - வண்ணையம்பதி, தியாகராயர் கல்லூரி கலா மண்டபத்தில், எங்கள் குமாரத்தி செல்வி ராணிக்கும், திரு. ஞாயிறு - ராசா அவர்களின் குமாரன் செல்வன் கலைச்செழியனுக்கும் திருமணம் நடைபெறும்.

அண்ணா அவர்கள் தலைமை வகித்து திருமணத்தை நடத்தி வைப்பார்கள். நண்பர்கள் பலர் வாழ்த்துரை வழங்குவர். அதுசமயம் தாங்கள் தங்கள் குடும்பத்துடன் வருகை தந்து மணவிழாவினைச் சிறப்பிக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

என். வி. நடராசன்—புவனேசுவரி

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.